பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**25 12 2025 THURSDAY 7.15 PM**

ஆகாஷவாணி

**<u>தலைப்புச் செய்திகள்</u>**

1. நாட்டில் கடந்த 11 ஆண்டுகளில் மக்களை மையமாக கொண்ட நல்லாட்சி உறுதி செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. மாநிலங்களின் வளர்ச்சிக்கு மத்திய அரசு முக்கியத்துவம் அளித்து செயல்படுவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

3. பிரதமரின் கிராம சாலைகள் திட்டத்தின் கீழ், இதுவரை 7 லட்சத்து 87 ஆயிரம் கிலோ மீட்டர் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. ஒடிசாவில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது 6 நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

5. வட மாநிலங்களின் பல்வேறு பகுதிகளில் கடும் குளிர் தொடர்ந்து நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>

நாட்டில் கடந்த 11 ஆண்டுகளில் மக்களை மையமாக கொண்ட நல்லாட்சி உறுதி செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மறைந்த முன்னாள் பிரதமர் பாரத ரத்னா அடல்பிகாரி வாஜ்பாயின் 101-ஆவது பிறந்த தினத்தையொட்டி லக்னோவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தேசிய நினைவிட அருங்காட்சியகத்தை திரு நரேந்திர மோடி இன்று திறந்துவைத்தார்.

இந்த நினைவிடத்தில் முன்னாள் பிரதமர் அடல்பிகாரி வாஜ்பாய், ஷியாம பிரசாத் முகர்ஜி, பண்டிட் தீன் தயாள் உபாத்யாயா சிலைகள் நிறுவப்பட்டுள்ளதை அவர் குறிப்பிட்டார்.

வாஜ்பாய், மதன்மோகன் மாலவியா ஆகியோரது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுவதையும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

இந்த தலைவர்கள் அனைவரும் வலுவான மற்றும் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற கனவை நனவாக்க பாடுபட்டதாக அவர் குறிப்பிட்டார்.

நல்லாட்சி, நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை, டிஜிட்டல் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் ஆகியவற்றுக்கு அடித்தளம் அமைத்தவர் அடல் பிகாரி வாஜ்பாய் என்று அவர் கூறினார்.

வாஜ்பாயின் கனவுகளை நனவாக்கும் வகையில் தமது அரசு செயல்பட்டு வருவதாக திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, சந்தாலி மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட அரசியல் சாசனத்தை குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இன்று வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய குடியரசுத் தலைவர், அரசியல் சாசனம் சந்தாலி மொழியில், மொழி பெயர்க்கப்பட்டுள்ளது, அம்மொழி பேசும் மக்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் விஷயம் என்று கூறினார்.

இது அரசியலமைப்பைத் தங்கள் சொந்த மொழியில் படிக்கவும் புரிந்துகொள்ளவும் அவர்களுக்கு உதவும் என்றும் அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய குடியரசுத் துணைத் தலைவர் திரு சி.பி. ராதாகிருஷ்ணன், இந்த முயற்சிக்காக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்முவுக்கு நன்றி தெரிவித்தார்.

இந்த மகத்தான முயற்சியால், சந்தாலி மொழி பேசும் மக்கள், அரசியல் சாசனத்தை தங்கள் சொந்த மொழியில் படிக்க உதவும் என்று கூறினார்.

சட்டத்துறை இணையமைச்சர் திரு அர்ஜுன் ராம் மேக்வால் உள்ளிட்டோர் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

அரசியல் சாசனத்தின் எட்டாவது அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள சந்தாலி மொழி, ஜார்க்கண்ட், ஒடிசா, மேற்கு வங்கம், பீகார் ஆகிய மாநிலங்களில் கணிசமான எண்ணிக்கையிலான பழங்குடியின மக்களால் பேசப்படுகிறது.

<<<<<<>>>>>

அனைத்து மாநிலங்களின் வளர்ச்சிக்கும் மத்திய அரசு முக்கியத்துவம் அளித்து செயல்படுவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

மத்தியப் பிரதேசத்தில் 2 லட்சம் கோடி ரூபாய் முதலீட்டை உறுதி செய்யும் ஆயிரத்து 655 தொழில் பிரிவுகளுக்கு அவர் இன்று அடிக்கல் நாட்டினார்.

பின்னர் மத்தியப் பிரதேசத்தின் வளர்ச்சி தொடர்பான உச்சி மாநாட்டில் பேசிய அவர், மறைந்த முன்னாள் பிரதமர் பாரத ரத்னா அடல் பிகாரி வாஜ்பாய் பிறந்த நாளில், அவர் பிறந்த ஊரில் இந்த மாநாடு நடைபெறுவது மகிழ்ச்சி அளிப்பதாக கூறினார்.

முந்தைய காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் பீகார், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களின் வளர்ச்சி மிகவும் பின் தங்கி இருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

பிஜேபி ஆட்சியில் சமமான வளர்ச்சி உறுதி செய்யப்படுவதாக திரு அமித்ஷா கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய முதலமைச்சர் திரு மோகன் யாதவ், அனைத்துத் துறை வளர்ச்சிக்கும் ஒரு வலுவான அடித்தளத்தை மாநில அரசு அமைத்துள்ளதாகக் கூறினார்.

<<<<<<>>>>>

பிரதமரின் கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் கடந்த 25 ஆண்டுகளில் 7 லட்சத்து 87 ஆயிரம் கிலோ மீட்டர் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்த திட்டம் தொடங்கப்பட்டு இன்றுடன் 25 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், போக்குவரத்து இணைப்பு, வேளாண் வளர்ச்சி, வேலைவாய்ப்பு உருவாக்கம், கல்வி என பல்வேறு துறைகளில் இத்திட்டம் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளில் இந்தத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்துக்காக 19 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் நான்காம் கட்டத்தின் கீழ், அடுத்த நான்கு ஆண்டுகளுக்குள் **70** ஆயிரம் கோடி ரூபாய் செலவில் மொத்தம் **62** ஆயிரத்து **500** கிலோமீட்டர் சாலைகள் அமைக்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை ஒப்புதல் அளிக்கப்பட்டதில் **96** சதவீத சாலைப் பணிகள் நிறைவடைந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

<<<<<<>>>>>

ஒடிசாவில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது **6** நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கந்தமால் பகுதியில் பாதுகாப்புப் படையினர் நடத்திய தேடுதல் நடவடிக்கையின்போது இவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதாக நக்ஸல் நடவடிக்கைகள் தடுப்பு காவல் துறை தலைவர் திரு அகிலேஷ்வர் சிங் தெரிவித்தார்.

கொல்லப்பட்டவர்களில் நக்சலைட் இயக்கத்தின் முக்கிய தலைவர் கணேஷ் உய்க்கேவும் ஒருவர் என்று அவர் கூறினார்.

தெலங்கானாவின் நல்கொண்டா மாவட்டத்தைச் சேர்ந்த கணேஷ் உய்க்கே பல்வேறு முக்கிய தாக்குதல்களில் மூளையாகச் செயல்பட்டுள்ளார்.

கணேஷ் உய்க்கேவைப் பிடிக்க உதவுபவர்களுக்கு, பாதுகாப்புப் படையினர் ஒரு கோடி ரூபாய் சன்மானம் அறிவித்திருந்தனர்.

அப்பகுதியில் தேடுதல் நடவடிக்கை தொடர்ந்து நடைபெற்று வருவதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, நக்ஸல் தீவிரவாதத்தை ஒடுக்குவதில் இது மற்றொரு முக்கிய மைல்கல் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா கூறியுள்ளார்.

ஒடிசா மாநிலம் நக்சல் தீவிரவாத்திலிருந்து முழுமையாக விடுபடும் நிலையில் உள்ளதாக சமூக வலைதளத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வரும் மார்ச் 31-ம் தேதிக்குள் நக்சல் தீவிரவாதத்தை முற்றிலுமாக ஒழிப்பதில் அரசு உறுதியுடன் செயல்பட்டுவருவதாகவும் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

இந்தியாவை அணுசக்தி நாடாக மாற்றிய தொலைநோக்கு பார்வை கொண்ட தலைவர் அடல் பிகாரி வாஜ்பாய் என்று ஆந்திர முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார்.

அமராவதியில் அமைக்கப்பட்டுள்ள அடல் பிகாரி வாஜ்பாயின் சிலையை, மத்திய அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகானுடன் இணைந்து இன்று அவர் திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய திரு சந்திரபாபு நாயுடு, அத்துமீறல்களுக்கு இந்தியா தகுந்த பதிலடி கொடுக்கும் என்பதை கார்கில் போர் மூலம் வாஜ்பாய் நிரூபித்ததாக கூறினார்.

நாட்டின் உள்கட்டமைப்புக்கு வாஜ்பாய் வலுவான அடித்தளத்தை அமைத்தார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தொலைத்தொடர்புத் துறையில் நாட்டின் முன்னேற்றத்துக்கு வாஜ்பாய் அடித்தளமிட்டதாகவும் தற்போது பிரதமர் திரு நரேந்திர மோடி அதை முன்னெடுத்துச் செல்வதாகவும் திரு சந்திரபாபு நாயுடு கூறினார்.

<<<<<<>>>>>

பாரத ரத்னா அடல் பிஹாரி வாஜ்பாயின் பிறந்தநாளை முன்னிட்டு, தில்லியில் அடல் உணவகத்தை தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தாவும், மத்திய அமைச்சர் திரு மனோகர் லாலும் இணைந்து இன்று தொடங்கி வைத்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திருமதி ரேகா குப்தா, நகரில் உள்ள ஏழை எளிய, உழைக்கும் மக்களுக்கு இது பெரிதும் பயன்

அளிக்கும் என்றார். இந்த உணவகத்தில் 5 ரூபாய்க்கு உணவு வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இன்றுமுதல் 45 உணவகங்கள் தில்லியில் செயல்படத் தொடங்கியுள்ளதாகவும், மேலும் 55 உணவகங்கள் அடுத்த 15 நாட்களில் திறக்கப்படும் என்றும் திருமதி ரேகா குப்தா தெரிவித்தார்.

மத்திய அமைச்சர் திரு மனோகர் லால் பேசுகையில், யாரும் பசியுடன் இருக்கக்கூடாது என்ற அடல் பிஹாரி வாஜ்பாயின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் இந்த உணவகம் திறக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>

தில்லி, சண்டிகர், ஹரியானா, பஞ்சாப், பீகார், உத்தரப் பிரதேசம், உத்தரகாண்ட், இமாச்சலப் பிரதேசம் உள்ளிட்ட பகுதிகளில் இன்று கடும் குளிர் நிலவும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மத்தியப் பிரதேசம், ஒடிசா, மேற்கு வங்கம் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கடும் பனி மூட்டம் நிலவும் எனவும் அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே, தில்லியில் இன்று காற்றின் தரம் மோசமாக இருந்ததாக மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

காற்றின் தரக் குறியீடு இன்று பிற்பகலில் **218** ஆகப் பதிவானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

பங்களாதேஷில் வரும் பிப்ரவரி மாதம் **12**-ம் தேதி நடைபெறவுள்ள தேர்தலில் அவாமி லீக் கட்சி போட்டியிட முடியாது என்று அந்நாட்டு இடைக்கால அரசு தெரிவித்துள்ளது.

அவாமி லீக் கட்சியின் செயல்பாடுகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாலும், அதன் பதிவு ரத்து செய்யப்பட்டதாலும் அக்கட்சியால் தேர்தலில் பங்கேற்க முடியாது என்று அந்நாட்டு அரசு மீண்டும் கூறியுள்ளது.

<<<<<<>>>>>

கம்போடியாவுடனான அமைதிப் பேச்சுவார்த்தை இரண்டாவது நாளாக இன்றும் நீடித்ததாக தாய்லாந்து தெரிவித்துள்ளது.

தற்போது எல்லைப் பகுதியில் தாக்குதல் நடவடிக்கைகள் குறைந்துள்ளதாக தாய்லாந்து பாதுகாப்பு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

ஆசியான் பார்வையாளர் குழுவில் இடம்பெற்றுள்ள மலேசிய பிரதிநிதிகளும் அமைதிப் பேச்சுவார்த்தையில் பங்கேற்றதாக அவர் கூறினார்.

அதிகாரிகள் நிலையிலான பேச்சுவார்த்தை நாளையும் நடைபெறும் என்றும் அதைத் தொடர்ந்து சனிக்கிழமை இரு நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களின் சந்திப்பு நடைபெறும் என்றும் தாய்லாந்து பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

நைஜீரியாவில் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைப் படை தாக்குதலில் ஐந்து பேர் உயிரிழந்தனர். 35 பேர் காயமடைந்தனர்.

மைதுகுரி பகுதியில் நடைபெற்ற இந்த தற்கொலை தாக்குதலுக்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

<<<<<<END>>>>>